நாள் 10-01-2024

OS No. 69/2020

பி.வா.சா.1, திருமதி.ரஹிமாள் பேகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கின் வாதி என் உடன் பிறந்த சகோதரி. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்குத் தெரிந்துதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். எதிர்வழக்குரை பத்தி எண்.4- இல் கிழக்கு மேற்காக 5 அடியும், தென் வடலாக 16 அடியும் பொதுபாதை இருந்ததாக கூறியுள்ளீர்கள் என்றால் பொது பாதையாக இல்லை. அது தவறுதலாக ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது. உங்கள் தாயார் உங்களுக்கு 24.06.2010 ஆம் தேதி எழுதிக் கொடுத்த ஏற்பாடு ஆவணம் வா.சா.ஆ.3 ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் முதல் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்தில் தான் நீங்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறீர்கள் என்றால் ஆமாம். அதே ஆவணத்தில் மூன்றாவது சொத்தாக பொதுபாதை என்று காண்பித்து உங்களுக்கு பாதி பாத்தியதை உள்ளதாக எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். அது அவர்களால் தவறுதலாக எழுதப்பட்டுள்ளது.

2. உங்களுக்கு எழுதிக் கொடுத்த ஏற்பாடு ஆவணத்தை போல உங்களுடைய சகோதரியான இந்த வழக்கின் வாதிக்கு உங்கள் தாயார் அதே தேதியில் வா.சா.ஆ.2 ஏற்பாடு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்திலும் மூன்றாவது சொத்தாக பாதையாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதுவும் தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. ஏற்பாடு ஆவணம் மூலம் நீங்கள் சொத்துக்களை பெற்று தற்போது வரை அதை பயன்படுத்தி தான் வருகிறீர்கள் என்றால் சரிதான். மேற்படி ஏற்பாடு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் உங்கள் தாயார் பாதையை மாற்றுவதாக ஏதாவது ஆவணங்கள் பதிவு செய்து கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. ஒவ்வொரு தெருவிற்கும் வீட்டு கதவு எண் கொடுத்து வீட்டு வாசல் எந்த தெருவில் உள்ளதோ அதற்கு தான் சொத்து வரி விதிப்பார்கள் என்றால் சரிதான். உங்கள் தாயார் உங்களுக்கும், உங்கள் சகோதரிக்கும் பொது பாதையாக கொடுத்த இடத்தை நீங்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

M SUNIL RAJA

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by M SUNIL RAJA
Location: Shencottah
Date: 2024.01.10 18:12:57 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai